DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகானந்தன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிச்சாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.08.2024

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் உங்களை பரிசோதித்தபோது இடது கை சுண்டுவிரல் மற்றும் மோதிர விரல் காயம் ஏற்பட்டதாகவோ வீக்கம் இருந்ததாகவோ மருத்துவரிடம் கூறவில்லை மருத்துவர் காயச்சான்று அதை குறிப்பிட்டு வழங்கவில்லை என்றால் நான் கூறினேன் மாத்திரை மட்டும் கொடுத்தார். உங்களை பரிசோதித்த மருத்துவரிடம் வலி இருந்ததாக தெரிவிக்காததால் அரசு மருத்துவர் கொடுத்த காயச்சான்றிதழில் சொல்லவில்லை என்றால் வலி இருப்பதாக கூறினேன். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் நீங்கள் தாக்கல் செய்த X Ray விற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. உங்களளுக்கு இடது கை சுண்டுவிரல் மற்றும் மோதிர விரல் காயம் ஏற்பட்டதாக முதலுதவி கொடுத்த மருத்துவர் குறிப்பிடாத நிலையில் தற்போது தாக்கல் செய்துள்ள X Ray ஏற்புடையது அல்ல என்றால் X Ray என்னுடையதுதான். முருகாந்தம் என்பவர் பெயரில் நிறைய பேர் இருப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் X Ray எனக்கு உள்ள 6 விரல் காணப்படுகின்றன அது அனைவருக்கும் இருக்காது.

நீங்கள் சொல்லி மருத்துவர் சிகிச்சை எடுக்கவில்லை என்று சொல்லி உள்ள நிலையில் அந்த மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே உங்களுக்கு காயம் ஏற்படாததால் தான் மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. X Ray யை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் இது நம்பகத்தன்மை உடையது அல்ல என்றாலும், அந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-. T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.